# அஷ்ரஃப் அமரகாவியம்



மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்ரஃப் அமரகாவியம்

மூதூர்.எம்.எம்.ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


- நூலின் பெயர் :- அஷ்ரஃப் அமரகாவியம்
- விடயம் :- காவியம் (கவிதை)
- ஆசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்
- வெளியீடு :- மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்
- அட்டைப்படம் :- B.நிஸ்காந்
- உரிமை :- நூலாசிரியருக்கு
- முதற்பதிப்பு :- ஏப்ரல் 2015
- பிரதிகள் :- 500
- ISBN :- 978-955-41569-4-4
- விலை :- 200/=


80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சரும் அன்றைய என் அரசியல் பயணப் பாதையில் எனக்கு ஒளிச்சுடராய் திகழ்ந்தவருமான என் நேசத்திற்குரிய அல்ஹாஜ் M.T ஹசன் அலி அவர்கட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் அலங்கரித்த அன்றைய கால கட்டம் தான் முஸ்லிம் சமுகத்தின் அரசியல் பொற்காலமாகப் போற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தலைமைத்துவ ஆற்றலும் அபார ஆளுமையும் அவரை அணிசெய்து நின்றது. ஓர் அரசியல் தலைமையிடம் என்னென்ன சிறப்பம்சங்கள் காணப்பட வேண்டுமோ அத்தனை அம்சங்களும் சிறப்பாக வாய்க்கப்பெற்ற மாபெரும் தலைவராகத் திகழ்ந்த இவர் தன்னுடைய அரசியல் பாசறையில் என்னை

- ➢ திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர்
- ➢ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் உயர்பீட உறுப்பினர்
- ➢ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்குழுச் செயலாளர் ஆகிய பதவிகளில் அமரச் செய்து எனக்குத் தன் அரசியல் ஞானங்களைப் புகட்டினார்.

அதனால் என் அரசியல் குருநாதர் மர்ஹூம்.எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களைப் பற்றி இந்நாட்டில் அதிகம் அறிந்த ஒருசிலருள் நானும் ஒருத்தனாக இருந்து கொண்டிருக்கின்றேன். ஆதலினால் மாமனிதர் அஷ்ர.்.ப் அவர்களைப்பற்றி அவருடைய அபார ஆற்றலைப்பற்றி எழுத வேண்டிய தார்மீக கடப்பாடு எனக்கு இருப்பதாக நான் உணர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த உணர்வுகளின வெளிப்பாட்டினால் "அஷ்ரப் அமர காவியம்" என்ற இக்காவிய நூலைப் படைத்துள்ளேன். இதேபோன்று இப்பெரும் தலைவரைப்பற்றிய இன்னும் பல படைப்புக்களையும் படைத்தளிக்க வேண்டுமென்ற உணர்வே என்னுள் மேலோங்கி வருகின்றது. தலைவனுக்கு தொண்டனின் சிறுகாணிக்கையாக இந்நூல் அமைகின்றது.

இந்நாட்டில் இன்னும் ஒரு நூற்றாண்டு காலம் கடந்த பின்பும் முஸ்லிம் சமூகத்தின் அப்போதைய எழுச்சிகளின் பொழுதுகளில் அச்சமூக வாலிபர்கள் தம்கரத்தில் ஏந்திவரும் கொடிகளில் பெருந்தலைவர் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்களின் உருவம் தான் துலங்கும் என்பது மறுக்கப்பட முடியா யதார்த்தமாகும். அத்தகைய உன்னத தலைவருக்கு ஓர் காவியம் படைத்ததில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். என் எழுத்துப்பணி அர்த்தமுடையதாய் ஆகியதையிட்டு ஆனந்தமடைகின்றேன். இந்நூலை வெளியீடு செய்த மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தாருக்கு என் உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

எம்.எம்.ஏ.அனஸ்
10.04.2015

பெரிய பாலம்
மூதூர் - 05
தொடர்பு :- 0776288299

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ரஃப் அமர காவியம்

01. எம்இனத்தின் எழுச்சிக்கு ஏற்றமிகு தலைமை
எழிலாகத் தந்திட்ட ஏந்தலராம் அஷ்ர·பை
இம்மண்ணில் பேர்பெற்று இலங்கும்கா வியமாய்
இனிதேயான் பாடுதற்கு இறையோனே அருள்வாய்

02. இந்துமா சமுத்திரமாய் இனியதமிழ் என்றும்
இலங்கிடவே என்னாவில் இனியவரம் தருவாய்
உந்தும்என் உள்ளத்தின் உணர்வுகளை எல்லாம்
உயர்தலைவர் பற்றித்தான் உரைத்திடவே கவியாய்

03. தன்உயர்வு எல்லாமும் தன்இனத்தின் உயர்வாய்
தினம்எண்ணி வாழ்ந்திட்ட திருவுருவைப் பற்றி
என்இதயப் பரப்பினிலே எழுந்திட்ட உணர்வை
ஏற்றகவி எனப்பாட ஏகனே அருள்வாய்

04. தன்இனமும் தழைத்தோங்க தன்னுயிரை உரமாய்த்
தந்திட்ட தலைவர்தம் தனிச்சிறப்பு தன்னை
நன்றாக நாடறிய நானுமே கவியால்
நவில்வதற்கு நாயகனே! நல்கிடுவாய் அருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. தலைவனுக்குத் தொண்டனவன் தருகின்ற நல்ல
தக்கதாம் வெகுமதியாய்த் தரணியிலே இந்த
கலைத்துவத்தில் உயர்வான காவியமும் திகழக்
காட்டிடுவாய் இறையோனே கருணைதனை எனக்கு

06. காவியத்து நாயகராய் காசினியில் மிளிரும்
கண்ணியோன் அஷ்ரஃபவர் கனதிறமை பற்றி
பாவாலே பாடுகையில் பாவுக்கே பெருமை
பகர்வேனே யானுமிதை பெருமகிழ்வாய் எங்கும்

07. மூதூரின் நெய்தல்நகர் முதுபதியில் பிறந்த
முகைதீன்அனஸ் ஆகியநான் முழுமனதே கொண்டு
காதூரும் காவியத்தை காத்திரமாய் யாத்து
காலமெலாம் அவர்புகழைக் கதைத்திடவே செய்வேன்.

08. தன்னுடைய அரசியலின் தரமாம்பா சறையில்
தக்கயிடம் தந்தெனக்குத் தரமாய்எனை வளர்த்த
என்னரசியல் குருநாதர் ஏந்தலராம் அவரை
ஏற்றதொரு காவியமாய் எழுதிடுவேன் நானும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. அரசியலின் ஞானத்தில் அதிசிறப்புப் பெற்ற
அருந்தலைவர் தொண்டனென ஆகியநான் அவரை
சிறப்பான காவியமாய்ச் சிந்தையே கொண்டு
சரித்திரத்தில் நிலைத்திடவே செப்பிடுவேன் நன்கு

10. காவியத்தால் சிறப்படையும் கனபேர்கள் தம்மில்
காவியமே சிறப்படையக் காரணமாய் அஷ்ர.்.ப்
ஆவதனை அறிவோமே அகிலத்தில் நாமும்
ஆனபெரும் சிறப்பெல்லாம் அணிகலனே அவர்க்கு

11. நாட்டினிலே அஷ்ர.்.பை நன்கறிந்தோர் சிலருள்
நானுமே ஒருத்தனதால் நன்றேயவர் பற்றி
ஏட்டினிலே எழுதிடவும் எடுத்துரைத்திட வும்என
ஏராள உரிமைகள் எனக்குண்டு என்பேன்

12. வயல்நிலமும் வாவிகளும் வாய்த்தபெரும் வரமாய்
வையத்தில் பேர்பெற்ற வளவூர்சம் மாந்துறை
உயர்செல்வ ஊர்என்ற உன்னதமே பெற்று
உலகத்தில் திகழ்வதுவும் உணர்வோமே நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இங்கினியா கலவென்னும் இன்னரிய வாவி
இருந்தேதான் பாய்கின்ற இதமான நீரும்
பொங்குவதால் களனியெலாம் பெருவிளைச்சல் தானே
பெரும்செல்வம் இப்பதியின் பாக்கியமே அறிவோம்

14. மருதநிலப் பரப்பாலே மண்ணினிலே அதுவும்
மேன்மைநிலை பெற்றேதான் மேவுவதும் பாரீர்
குறிஞ்சிநிலம் முல்லையுமே குறிப்பாக இறையின்
கொடையாகச் சம்மாந்துறை கொண்டேதான் உளதே!

15. சம்மாந்துறை ஊரதுவும் செகத்தினிலே மேலும்
சிறப்புற்றுத் திகழ்ந்திடவே சரித்திரத்து நாயன்
எம்மனதில் நிறைந்திட்டோன் ஏற்றமிகு தலைவன்
எம்எச்எம் அஷ்ர.்.பினை எமக்கீந்ததும் காணீர்

16. ஆயிரத்துத் தொழாயிரத் அமைநாப்பத் தெட்டில்
ஆனஐப்பசி இருபத்தி மூன்றினிலே அஷ்ர.்.ப்
நேயமிகு முகம்மதுகுஸைன் மதினாஉம்மாவெனும்
நற்பெற்றோர் மகவாய்ச்சம் மாந்துறையில் மலர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஆரம்பக் கல்வியினை அல்அஸ்ஹர் பள்ளி
ஆனதனில் கல்முனையில் அஷ்ர.்.பும் கற்றார்
பேரெடுப்பார் பின்னாளில் பெரியோனாய் ஆவார்
புரிந்தார்கள் பாலகனைப் பலருமே அன்று

18. ஆறாவது ஆண்டதனை ஆங்குற்ற கல்முனை
அதிசிறப்பின் பாத்திமா ஆனகலைக் கூடம்
பூரிப்பாய்ச் சென்றேதான் படித்திட்டார் அஷ்ர.்.ப்
பெரும்மாற்றம் இங்கவரும் பெற்றிட்டார் தானே

19. கிறிஸ்தவரும் இந்துக்களும் கனமாகக் கற்கும்
கலைக்கூடம் இங்கேதான் காத்திரமாய் அவரும்
பிறமதத்துப் புரிந்துணர்வை பெற்றிட்டார் நன்கு
பின்னாளில் இன்னதுவும் பேருதவி அவர்க்கு

20. சாரணிய குருளைஎனும் சங்கத்தில் இணைந்து
சிறுவராம் அஷ்ர.்.பும் சிறப்பேதான் பெற்றார்
பேருதவி என்றேதான் பாத்திமாப் பள்ளியும்
பல்வேறு நிகழ்வுக்கும் பாதையவர்க் ஆச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கல்முனையின் உவெஸ்லியெனும் கலைக்கூடம் தன்னில்
கற்கஏ ழாம்வகுப்பில் காலடியே வைத்தார்
நல்முறையில் ஆறாண்டு நாட்டமாய்க் கற்றார்
நற்றலைவன் ஆவதற்கு நற்பயிற்சியும் பெற்றார்

22. கொழும்புஅலக்ஸ் சாந்திரியா கல்லூரி தன்னில்
காத்திரமாய் ஆங்கிலத்தைக் கற்றேதான் தேர்ந்தார்
வழக்காற்று மன்றினிலே வாதாட அவர்க்கு
வளமாக அம்மொழியும் வாய்த்ததுவே நன்கு

23. சட்டக்கல் லூரியிலே சேர்ந்தவரும் கற்றார்
சிறந்ததொரு வக்கீலாய்ச் சரித்திரமே படைத்தார்
பட்டங்கள் பலவற்றைப் பின்னாளில் பெற்றார்
பாரினிலே சிறப்பதனில் பரிணமித்து நின்றார்

24. பணம்பறிக்கும் தொழிலென்று பேர்பெற்ற வக்கீல்
பணிசெய்த வேளையிலே பணம்வாங்காப் பேசிய
குணம்இவரும் கொண்டதையும் குவலயமும் அறியும்
கோடியிலே ஒருத்தரிவர் கண்டிடுவோம் நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. கொழும்பினிலே சட்டமது கற்கின்ற காலம்
கொடுமைமிகு வறுமையினை கலைவதற்காய் அவரும்
தொழிலாகத் தம்ஊரின் தறிச்சாரம் விற்றார்
தன்கல்விச் செலவுக்குத் தீர்வேதான் கண்டார்

26. பேரியல்எனும் மாதைத்தன் பொருந்தில்லாள் ஆக்கி
பெருவாழ்வு வாழ்ந்திட்டார் பாக்கியமாய் அதிலே
வாரிசாய் அமான்எனும் வளமகனைப் பெற்றார்
வாழ்விடமாய் கல்முனையும் கொழும்பையுமே கொண்டார்

27. ஆயிரத்துத் தொழாயிரத்து எழுபத்தி ஏழில்
அரசியலில் முஸ்லிம்ஐக் கியமுன்னணி அமைப்பை
தூயதாம் சிந்தையுடன் தொடங்கியே கிழக்கில்
தமிழர்தம் கட்சியிலே தேர்தல்க்களம் கண்டார்

28. பத்தியுத்தீன் மஃமூத்தின் பாங்காம்தலை மையிலே
பற்றிட்ட இனப்பூசல் பற்றியதாம் தீர்வில்
கதிதன்னை இனத்திற்குக் காட்டிடஜே ஆருடன்
கதைத்திட்டார் சர்வகட்சி மாநாட்டில் அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. தமிழ்முஸ்லிம் உறவுக்காய்த் தளராமல் உழைத்தார்
தாய்நாட்டில் இவ்வுறவே தலையாய தென்றார்
தமதெல்லா நடத்தையிலும் தமிழுறவை வளர்த்தார்
தீயோரோ வன்செயலால் தீயிட்டார் உறவை

30. கிழக்கினிலே கிளர்ந்திட்ட கறையான வன்செயல்
கண்டேதான் கவலையினால் கண்ணீரைச் சொரிந்தார்
இழந்திட்ட இனஉறவு இங்கினியும் வளர
இருக்காமோ வழியென்று இரவுபகல் ஆய்ந்தார்

31. கல்முனையின் கலவரத்தின் காரணம்அஷ் ர.்.ப்என
கயவர்கள் பரப்பிட்ட கதைகளினைக் கேட்டு
இல்லாத கதைசொல்லும் இவர்களது உள்ளம்
இருக்கிறதே பாம்பினது இருப்பிடமாய் என்றார்

32. இனவாதி அஷ்ர.்.ப்என இழிந்தோர்கள் உரைக்க
இதயமே நொந்தழுது இருந்தபதி துறந்து
கனகவலை மேலோங்கக் கொழும்புமா நகரில்
குடியேறித் தம்வாழ்வைக் கடத்திட்டார் ஆங்கே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. கொழும்பினிலே வாழ்ந்தாலும் கிழக்கினிலே நிகழும்
கொடுமைகளை அன்றரசின் கவனத்திற் கொணரும்
வழமையினைக் கொண்டவரும் வழமைநிலை கிழக்கில்
வந்திடவே உழைத்ததனை வகையாய்நாம் அறிவோம்

34. ஆயிரத்துத் தொழாயிரத் எண்பதாம் ஆண்டின்
அமைந்தபுரட் டாதிருபத் தொன்றாந்தே தியன்று
தூயதாம் நோக்குடனே காத்தான்குடி மண்ணில்
தொடங்கிட்டார் காங்கிரசு கட்சிதனை அஷ்ர.ஃப்

35. காங்கிரசுக் கட்சிதனை கரிசனையாய் அவரும்
கடும்எதிர்ப்பு மத்தியிலும் காத்திரமாய் வளர்த்தார்
பாங்காக இனத்திற்காய்ப் பலபணிகள் புரியப்
பாதையது கட்சியெனப் பகன்றேதான் நின்றார்

36. தாய்நாட்டில் முஸ்லிம்கள் தனித்துவஅர சியலில்
திழைத்திடவே தலைவரிவர் தந்திட்ட கட்சி
தூய்மையுடன் இனநலனில் துலங்கியதே நன்கு
தூயதாம் சிந்தையோர் துணையானார் இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. ஆயிரத்துத் தொளாயிரத் தெண்பத்தின் ஏழில்
அன்றான உள்ளூரதி காரசபைத் தேர்தலை
ஆயுதத்தால் புலிகளுமே அப்படியே தடுத்தார்
அவ்வேளை காங்கிரசை அப்புலிகள் எதிர்த்தார்

38. அஞ்சாமல் அஷ்ர.்.பும் அரசியலைத் தொடர்ந்தார்
அடக்கிடவே முஸ்லிம்களை ஆர்புலிகள்? என்றார்
துஞ்சாமல் தன்பணியைத் தொடர்ந்திட்டார் அவரும்
தொடராக வெற்றியிலே துலங்கிட்டார் இதனால்

39. பேரினத்து வாதிகளின் பிடியினிலே சிக்கி
பெரிதாக இனநலனைப் பாராது வாழ்ந்த
பாராளு மன்றமுஸ்லிம் பிரதிநிதிகள் தம்மால்
பாதிப்பே உற்றுஇனம் பரிதாப நிலையில்

40. தனித்துவமும் இல்லாது தன்மானம் இழந்து
தான்வாழும் தலைவர்கள் தங்களுக்கு எதற்கோ
இனியிவர்கள் இருந்தென்ன இறந்தென்ன என்று
இயம்பியே நாட்டினிலே இஸ்லாத்தார் இருந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. இத்தகைய வேளையிலே இலட்சியமாய் அஷ்ர.்.ப்
இனத்தினது காப்பாக ஈங்குற்றார் இனிதே
எத்தனையோ இன்னல்களை எதிர்கொண்டு தன்னை
எளிலாகத் தாங்கித்தான் எம்முரிமை காத்தார்

42. முஸ்லிம்கள் நலனதனை முனைப்பாகக் கொண்டு
முறையான அரசியலை முன்னின்று நடத்தி
இஸ்லாத்தின் வாடையுடன் இன்பமுடன் வாழ
இனியநெறி தந்தெங்கள் இதயத்தில் நிறைந்தார்

43. ஆயுதமும் அதிகார ஆணவமும் தானே
ஆனபெரும் தலைமையென்ற அர்த்தமுடன் நாட்டில்
தூயதோர் தெளிவின்றித் துலங்கிட்ட எம்மோர்
துடிப்புடனே சிந்திக்கத் துணையென்றே ஆனார்

44. தன்னுடைய கட்சிதனில் தக்கதோர் இடத்தை
தந்தேதான் எந்தனுக்குத் தினமுமவர் அளித்த
உன்னதமாம் ஞானத்தை உரைப்பேனே எங்கும்
உலகத்தில் அவர்புகழோ! உயர்ந்தோங்கும் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. அரசியலுயர் பீடம்எனை அமர்ந்திடவும் செய்தார்
அவர்கட்சிச் செயற்குழுவின் அரும்பதவி என்றே
...புற்ற செயலாளர் பதவியையும் தந்தார்
சிரத்தையுடன் நானுமதைச் செய்தேனே நன்கு

46. அத்துடனே காங்கிரசை அதிகம்வளர்த் தெடுக்க
அனஸ்என்னை அமைப்பாளர் ஆக்கிட்டார் அவரும்
கத்துகடல் வளம்மிக்க திருகோண மலையின்
கனபரப்பு மாவட்டம் கொண்டவிடம் எல்லாம்

47. அருந்தலைவர் அஷ்ரஃபின் அரசியலுக் கன்று
அடிப்படையாய் அமைந்திட்ட அரியோரில் அனஸ்யான்
சிறப்பான இடத்தினிலே சஞ்சரித்தே நின்றேன்
சரித்திரங்கள் இதற்கென்றும் சான்றாகும் நன்கு

48. ஆயிரத்துத் தொழாயிரத்தின் ஆண்டெண்பத் தொன்பதில்
ஆனாரவர் பாராளுமன் றங்கத்தவர் என்றே
வாய்திறந்து இனத்திற்காய் வாதாடி ஆங்கே
விடிவேதான் தந்தெம்மை வனப்புறவே செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. இத்தகைய வேளைஈ என்டிஎல்எப் இயக்கம்
இலட்சியத்துத் தலைவர்தம் இன்னுயிரை மாய்க்க
சத்தியமே பிறழ்ந்துசதி செய்தேதுரத் திட்ட
சங்கதியும் சரித்திரத்தில் சாகாதே என்போம்

50. ஆயிரத்துத் தொழாயிரத் துத்தொன்நூற்(றி) நாலில்
ஆகிட்டார் அமைச்சரென அஷ்ரபவர் தானே!
நேயமுடன் தன்பணியை நெறியாக ஆற்றி
நாட்டினது நாற்புறமும் நற்பெயரே பெற்றார்

51. சந்திரிக்கா அம்மையார் சரித்திரத்துத் தலைமை
சிறப்புறவே அமைச்சரிவர் சிறப்பாக உழைத்தார்
வந்திட்ட இடரினையும் வசந்தமென ஏற்று
வையகமே அதிசயிக்க விளங்கிட்டார் அவரும்

52. துறைமுகத்தின் அமைச்சரெனத் துலங்கிட்ட போதில்
தூயதாம் முறையினிலே துடிப்பாய்பணி புரிந்தார்
நிறைவான சேவைகளை நாட்டுக்காய்ச் செய்து
நல்லோர்கள் நெஞ்சத்தில் நன்கேதான் நிறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. புனர்வாழ்வு அமைச்சராய்ப் பொறுப்பினையும் ஏற்றுப்
பாங்காக அகதியரின் பேரின்னல் துடைத்தார்
கனத்தபல சேவைகளின் கர்த்தாவாய் ஆகிக்
காலமெலாம் தன்புகழைக் காசினியில் பதித்தார்

54. தலைமைக்குச் சான்றாகத் தரணியிலே திகழ்ந்த
தகைமையோன் அஷ்ர.'.ப்புகழ் தழைத்திடுமே நாளும்
நிலையாக அவர்நாமம் நிலத்தினிலே ஓங்கும்
நம்வருங்கா லத்தோரும் நன்கிவரைத் துதிப்பர்

55. உன்னதமாய்த் தலைமைதந்த உத்தமனாம் இவரை
உரைக்காத கவிஞனவன் உண்மைக்கவி ஆகான்
திண்ணமுடன் செப்புகிறேன் திறனோரே உணர்வீர்
தருகின்ற என்தீர்ப்பு தவறில்லை என்பீர்

56. காடுகளும் களனியெனக் காட்சிதரச் செய்தே
கனத்தபல சேவைகளின் காரணனாய் ஆனார்
ஏடுகளும் அவர்புகழை எடுத்தெழுத உயர்ந்தார்
ஏற்றத்தின் உச்சத்தில் என்றென்றும் திழைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. பயணத்தின் பாதைகளும் பள்ளிக்கூ டங்களும்
பல்திக்கும் நாட்டினிலே பாங்குடனே அமைத்தார்
உயரியதாம் சிந்தையதன் ஊர்றென்றே அவரும்
உலகத்தில் உயர்புகழை உரித்தாக்கிக் கொண்டார்

58. ஆடையென எம்மினத்தை அணிசெய்தே நாளும்
அரியபல சேவைகளை அரும்பேறாய்த் தந்தார்
மேடையிலே பேச்சதனை மேவவிட்டால் அவரும்
மக்களெலாம் அவருரையில் மயங்கித்தான் போவர்

59. விடுதலைக்கு வித்திட்ட வீரமகன் அஷ்ர.்.ப்
வளநாட்டில் எம்இனத்தின் வரமென்றே ஆனார்
கொடுமைகளை மாய்க்கின்ற கொடும்வாளாய்த் துலங்கி
காலமெலாம் காத்திரமாம் கனசேவை செய்தார்

60. அஷ்ர.்.ப்எனும் நாமத்தை அறைகின்ற போதில்
அகமெல்லாம் இன்பமதாய் ஆகிறதே எமக்கு
இஸ்லாத்தின் மாந்தர்க்கு இந்நாட்டில் அவரும்
இனிதளித்த சேவைகளோ இயம்பிடவும் முடியா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. ஏராள சேவைகளை எழிலாகச் செய்தே
எம்மினத்தின் உயர்ச்சிக்கு ஏணியென ஆனார்
பாராளு மன்றத்தில் பகர்ந்திட்ட அவரின்
பேச்செல்லாம் புவிசெப்பும் பொன்மொழிகள் தானே!

62. மாற்றினமும் மெச்சுகிற மாமனிதர் என்றே
மண்மீதில் அன்னவரும் மகிமையிலே திளைத்தார்
ஆற்றலெலாம் அமைந்திட்ட அருந்தலைவர் ஆக
ஆண்டவனும் அஷ்ர.்.பினை அவனிதனுக் களித்தான்

63. செந்தமிழை இந்நாட்டில் செழுமையுறச் செய்ய
சிறப்பாகப் பணியாற்றிச் சிந்தையே மகிழ்ந்தார்
தந்தவரின் நான்எனும்நீ தனித்தகவி நூலோ
தக்கதோர் சான்றாமவர் தமிழ்பணிக்குத் தானே

64. நாட்டினது நாற்புறம்வாழ் நரர்களினை அவரும்
நன்கறிந்து மகிழ்வாக நாளுமுறை யாடி
கேட்டறிந்தே அன்னோரின் குறைகலைந்து மகிழ்ந்தார்
காலமெலாம் மக்கள்பணிக் கர்த்தாவும் ஆனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. கட்சிதனின் கொள்கைதனைக் காப்பதிலே என்றும்
கருத்தாக இருந்திட்டார் கடும்பகைமை தாங்கி
திட்டமுடன் நாட்டினிலே தன்னினமும் தழைக்க
தனித்தபெரும் கொழுகொம்பாய்த் தானாகிப் போனார்

66. எம்மினத்தை உயர்த்துகிற ஏராளச் சிந்தை
ஏற்றமென அவருளத்தை என்றுமணி செய்ய
தம்வாழ்வும் தம்உயிரும் தம்இனத்திற் கென்று
தரணியிலே தனித்தபெரும் தத்துவமே தந்தார்

67. நம்பியே வந்திட்ட நல்லருமைத் தொண்டர்
நலமெல்லாம் பேணித்தான் நற்குயரச் செய்தார்
இம்மண்ணில் அவரைப்போல் இணையற்ற தலைமை
இஸ்லாத்தின் இனத்தார்க்கு இல்லைதான் என்போம்

68. நாட்டினது நடப்புக்களை நன்கறிந்தார் நாளும்
நாளையதாம் நிகழ்வுகளை நவின்றிடுவார் முன்பே
வாட்டிடவே வந்ததுயரை வசந்தமெனக் கொண்டார்
வையத்தில் இவர்தலைமை வரமேதான் எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. சேவையது செய்வதிலே சிந்தையே மகிழ்ந்தார்
செப்பியது யாவையுமே செயலினிலே முடித்தார்
நாவையென்றும் நன்முறையாய் நானிலத்தே காத்தார்
நம்நெஞ்சில் இதனாலே நன்றாக நிறைந்தார்

70. செந்தமிழைச் சிந்தையிலே சிறப்பாக இருத்தி
சிறந்தபல கவிதைகளைச் சரித்திரத்தில் நிலைக்க
தந்திட்ட நான்எனும்நீ தரமாமிவர் கவிநூல்
தமிழுக்காம் இவர்பணியை தகுமுறையாய்ச் சாற்றும்

71. மக்கள்மனம் கவர்கின்ற மாபெரிய சக்தி
மண்ணிலே இவருக்கு மாவுடைமை தானே!
எக்கவலை என்றாலும் எல்லாமும் தாங்கும்
ஏற்றதொரு இதயத்தின் எழிவுடைமை இவரே

72. கல்வித்துறை தனில்எம்மோர் கரிசனையே கொள்ள
கட்டியஇவர் தென்கிழக்கு கலாசா(லை) சான்று
சொல்லிடவும் முடியாத சேவைகளின் கருவாய்
சிறப்புற்றுத் திகழ்ந்திட்டார் செம்மலராம் அஷ்ர.்.ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. சிங்கத்தனத் தலைமைக்குச் சான்றென்றே ஆனார்
சீரிய சிந்தையினால் சிறப்பேதான் பெற்றார்
பங்கமது யார்க்கேனும் புரியாமல் நடந்தார்
பகைவருமே மெச்சுகிற பண்புநெறி கொண்டார்

74. அறியாமை இனத்தினது ஆசானும் ஆனார்
அபிவிருத்தி இனம்காண அடிப்படையும் ஆனார்
நெறிதவறா நீதிவழி நெடுநிலத்தில் வாழ்ந்தார்
நெஞ்சமெலாம் எம்மிடத்தே நிறைந்தேதான் உள்ளார்

75. தானைத்தலை வன்என்ற தகுசிறப்பும் பெற்றார்
தனித்துவமாய் இனத்திற்குத் தலைமையதும் தந்தார்
ஞானத்தின் உச்சத்தில் நிகரின்றித் திழைத்தார்
நாயனவன் பேறென்றே நமக்கவரும் ஆனார்

76. கல்லுடனே மண்ணதுவும் கவிபாடும் வண்ணம்
கனத்தபல சேவைகளின் காரணரும் ஆனார்
சொல்லதனில் வாய்மைதனைச் சிறப்பாகக் காத்தார்
செப்பிடவும் இயலாத சிறப்பெல்லாம் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. இயலாது என்றவரும் இயம்பியது கிடையா
இனிமையுடன் உரையாடும் இயல்பேதான் கொண்டார்
உயரியதாம் கொள்கையதன் உருவாயும் நின்றார்
உள்ளத்தைத் தூய்மையதன் ஊற்றாகக் காத்தார்

78. தமிழ்முஸ்லிம் உறவதனைத் தழைத்தோங்கச் செய்ய
தாய்நாட்டில் எந்நாளும் தீவிரமாய் முயன்றார்
அமிர்தம்என அவர்உரையை அப்படியே பருக
அணிதிரழ்வர் மக்களெலாம் அவர்பேசும் இடத்தே

79. சோம்பலது தெரியாமல் சுறுசுறுப்பாய்த் திகழ்ந்தார்
சேவையது செய்வதிலே சுகந்தத்தைக் கண்டார்
பாம்பினது காட்டினிலும் பயமின்றி நடந்தார்
பண்புநெறி காப்பதிலே பேணுதலாய் இருந்தார்

80. அரசியலின் ஞானத்தின் அடைக்கலமும் ஆனார்
அச்சமது அறியாத ஆளாயும் மிளிர்ந்தார்
பரந்திட்ட சிந்தனையின் புகழிடமும் ஆனார்
பெரும்புகழின் உச்சத்தில் பரிணமித்தே உயர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. தனித்துவமே குன்றாத தேசியத்தைத் தந்தார்
தன்மானம் இனத்திற்குத் தலையென்றே சொன்னார்
இனியநெறி காட்டித்தான் இனத்தினையும் காத்தார்
இவர்போல ஓர்தலைவன் இந்நாட்டில் இல்லை

82. எளிமைதனைப் பேணுவதில் ஏற்றமது கண்டார்
எல்லோரின் மனங்களிலும் எழிலாக நிறைந்தார்
துளியளவு பெருமையையும் தூரவே விட்டார்
துடிப்பாகத் தம்பணியில் துலங்கியே நின்றார்

83. இலக்கியத்தைக் கதைப்பதிலே இன்பமே கண்டார்
இன்பத்தமிழ்ச் சிறப்பதனை இயம்பியே நின்றார்
பலகலையும் கற்றறிந்த பண்டிதராய்த் திகழ்ந்தார்
பரமனிறை எமக்களித்த பேறென்றே ஆனார்

84. தேவையென வருவோர்க்குத் தானுதவி செய்தார்
தனையேற்ற தொண்டர்களை தரமாக மதித்தார்
நாவையவர் என்றுமே நல்முறையில் காத்தார்
நம்நெஞ்ச இருப்பிடமாய் நிலையாகிப் போனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. தாய்நாட்டுப் பற்றினிலே தலைசிறந்து நின்றார்
தன்இனத்தின் தனித்துவமே தன்தலைமை என்றார்
வாய்மைதனைக் காப்பதிலே விஞ்சியே திழைத்தார்
வல்லோனின் மறைவழியில் வாழ்ந்துமே வந்தார்

86. எவர்யாரைக் கண்டிடினும் எப்படித்தான் நலமோ!
என்றேதான் வினவுவதில் எளிலேதான் கொண்டார்
தவறென்று கண்டதனைத் தவிர்த்தேதான் நடந்தார்
தன்மானம் இனத்தினது தலையேதான் என்றார்.

87. தேவையென வருவோர்க்கு தயவேதான் தந்தார்
தலைநிமிர்ந்து நாட்டினிலே தன்னினமும் வாழ
ஆவலுடன் நாளுமே அயராது உழைத்தார்
அருஞ்சேவை இனத்திற்கு அயராமல் செய்தார்

88. சான்றோனே என்றவரும் சரிதையிலே ஆனார்
சாவையுமே எண்ணாது சாதனைகள் புரிந்தார்
ஈன்றவூர் என்பதிலே இன்பமே உற்றார்
இயன்றவரை அதுஉயர இனியபணி செய்தார்

 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. சாதிமத பேதமெலாம் சரிந்திடவே செய்தார்
சேவைதனில் இன்னதனைச் சிறிதேனும் பாரார்
நீதியிலே அவருக்கு நிகர்யாரும் இல்லை
நாட்டுக்கே அஷ்ர.்.பவர் நாயனவன் பேறே!

90. தமிழ்முஸ்லிம் உறவுக்காய்த் தவியாகத் தவித்தார்
தாய்நாட்டில் அமைதிநிலை தழைத்தோங்க முயன்றார்
தமதுயிரும் வாழ்வதுவும் தன்இனத்திற் கென்றார்
தியாக இலக்கணமாய்த் தரணியிலே திகழ்ந்தார்

91. நகைச்சுவையே மேவிவர நன்றாகக் கதைத்தார்
நாட்டினது நடப்பெல்லாம் நன்கேதான் அறிந்தார்
பகைமையது சூழ்வேளை பதறாமல் நின்றார்
பண்பினிலே இவருக்குப் பகரம்யார் உண்டோ!

92. பிறமதங்கள் அத்தனையும் பெரிதாக மதித்தார்
பெருமையது கொள்ளாமல் பணிவாக நடந்தார்
கறைகொண்ட உள்ளத்தைக் கனவினிலும் வெறுத்தார்
கண்ணியமே மாந்தர்க்குக் கருவென்று கதைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. தோல்விகளே வந்திட்ட தருணமதில் கூடத்
தளராத உள்ளமுடன் தாங்கியதை ஜெயித்தார்
பால்போன்ற உளத்தூய்மைப் பாசறையும் ஆனார்
பண்புநெறி காத்தேதான் பக்குவமாய் நடந்தார்

94. நாடதுவும் போற்றுகிற நாவலனும் ஆனார்
நம்நெஞ்சம் நிறைவுறவே நற்றலைமை தந்தார்
ஏடதுவும் அவர்புகழை எடுத்தெழுத உயர்ந்தார்
எங்களினம் மறக்காத ஏந்தலரும் ஆனார்

95. வாசியதன் பக்கமது வருவோரை வெறுத்தார்
வாய்மைவழி வாழுவதில் வாஞ்சைமிகக் கொண்டார்
தூசியென எதிர்ப்புகளைத் துச்சமாய் மதித்தார்
துணிந்தேதான் இனத்தினது துயரெல்லாம் துடைத்தார்

96. தலைமைக்குத் தகுதலைவன் தானென்றே ஆனார்
தலைமையதும் தன்னாலே தழைத்திடவே செய்தார்
கலைகளினை வளர்ப்பதிலே கரிசனையும் கொண்டார்
கடமையுடன் கண்ணியத்தின் காவலனும் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. எவருக்கும் அடிமையென எம்மினமோ ஆகா
எல்லாவித உரிமைகளும் எமக்குண்டு தானே!
தவறிதிலே யார்செயினும் தான்பொறுக்க மாட்டேன்
தகுமுறையில் அவ்வுரிமை தந்திடுவேன் என்றார்

98. அஞ்சாத நெஞ்சத்தின் அணிகலனாய்த் திகழ்ந்தார்
அதர்மத்தை அழித்தொழிக்கும் ஆயுதமும் ஆனார்
துஞ்சாத நிலைகொண்ட துடிப்புநிலை யாலே
தூயதாம் தலைமையிலே துலங்கிப்புகழ் பெற்றார்

99. முதியோரை மதிப்பதிலே முதன்மைநிலை கொண்டார்
மனமுவந்து அவர்களுடன் மகிழ்வாகக் கதைத்தார்
பதியினிலே வாழ்ந்திடுதல் பணிகளுக்கே என்றார்
பண்புகளை வாழ்வினிலே பக்குவமாய்க் காத்தார்

100. காண்போரைப் பெயர்கூறிக் கனிவாக அழைப்பார்
கண்ணியமாய் உறவாடிக் களிப்பேதான் கொள்வார்
ஏன்என்ன தேவையென எடுத்தேதான் வினவி
ஏற்றபல பணிசெய்து எளிலேதான் கொள்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. அல்லாமா இக்பாலெனும் அகிலம்புகழ் கவிக்கு
அப்படியே நிகரான அரும்சிந்தை கொண்டார்
வல்லவனாம் இறையோனும் வரமென்றே அவர்க்கு
வாய்வார்த்தை கனம்பெறவே வரமருளி நின்றான்

102. இந்தியா நாட்டினது இஸ்லாமிய இனத்தின்
இன்னரிய தலைமையென இனிதேதான் துலங்கிய
அந்தபெரும் ஜின்னாவின் அருந்தலைமைக் ஒப்பாய்
அஷ்ர.்.பவர் தலைமையினை அறைந்திடுவோம் நாமும்

103. எட்டாத கனியென்று எமக்கேதான் இருந்த
ஏராள உரிமைகளை எடுத்தெமக்குத் தந்தார்
பட்டிட்ட துயரெல்லாம் பறந்தெங்கோ போக
பாதையென அவராகிப் பெரும்சிறப்பே பெற்றார்

104. நாட்டினது ஊரெல்லாம் நான்பிறந்த ஊரே!
நவின்றன்றோ நற்சேவை நாளுமிவர் செய்தார்
காட்டிட்ட அவரரசியல் காத்திரமாம் நெறியோ
காலத்தால் அழியாமல் காட்சிதரும் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. இன்னும்ஓர் நூற்றாண்டு இந்நாட்டில் செல்லின்
இஸ்லாம்இன எழுச்சியினை இயம்புகிற வண்ணம்
உன்னதமாம் இளைஞர்கள் ஓர்கொடியை ஏந்தின்
உருஅதிலே அஷ்ர.்.ப்தான் உயர்காட்சி தருவார்

106. அரசியலின் ஞானத்தில் அரிஸ்டோட்டில் போன்று
அருந்தலைவர் அஷ்ர.்.பும் அதிஞானம் பெற்றார்
வரலாறும் அவர்புகழை வடிவாகப் புவியில்
விதந்துரைத்து நிற்கிறதே விளங்கிடுவோம் நாமும்

107. ஊக்கமெனும் தன்மையிலே உச்சத்தில் திகழ்ந்தார்
உன்னதமாம் நிலையினுக்கு ஊற்றாகிப் போனார்
வாக்குறுதி காத்தேதான் வாய்மைவழி நின்றார்
வளமான சிந்தனையின் விளைநிலமும் ஆனார்

108. நாடாளு மன்றத்தின் நாயகனும் ஆனார்
நாவளத்தின் காரணமாய் நற்கீர்த்தி பெற்றார்
ஈடாகா நற்றலைமை இலக்கணமும் இவரே!
இவர்போல தகுதலைமை இந்நாட்டில் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

109. ஒலுவில்தனில் துறைமுகத்தை உருவாக்கித் தந்தார்
உயர்பணிக்குச் சான்றாய்யதை உருக்கொள்ளச் செய்தார்
பலகலைக்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழ கமதும்
பரிணமிக்கச் செய்தேதான் பார்போற்ற உயர்ந்தார்

110. புனர்வாழ்வு அமைச்சரெனப் பெரும்பதவி தாங்கி
போராலே அகதியெனப் பேரின்னல் உற்ற
சனங்களுக்கு உதவியதில் சரித்திரமே படைத்தார்
சத்தியமாய்ச் சேவைக்குச் சான்றேதான் அஷ்ரஃப்

111. துறைமுகத்து அமைச்சரெனத் துலங்கிட்ட போதில்
துணிச்சலுடன் பல்லாயிரம் துடிப்பின்இளை ஞர்க்கு
முறையாகத் தொழில்வழங்கி முன்னேறச் செய்தார்
மண்மீதில் இவர்சேவை மறந்திடவே முடியா

112. வன்செயலால் இடம்பெயர்ந்து இன்னலுற்ற மக்களை
வாழிடத்தில் மீள்குடியாய் வந்தமரச் செய்தார்
மண்மீதில் சேவைக்கு மாதலைவன் இவரே!
மறக்காரே ஓர்போதும் மக்களெலாம் இவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113. நயமாகப் பேசுகிற நற்பண்பு தன்னால்
நாளுமவர் மக்களினை நன்றாகக் கவர்ந்தார்
உயரியதாம் உள்ளத்தை உடைமையெனக் கொண்டு
உன்னதத்துத் தலைவனென உலகுரைக்க உயர்ந்தார்

114. விருந்தோம்பும் தன்மையிலே விஞ்சியே நின்றார்
வையத்தில் நற்பண்பின் வாழ்விடமும் ஆனார்
தெருவினிலே வந்தாலிவர் திருவிழாவே ஆங்கு
தனிச்சிறப்பாய் இதைஅவர்க்குத் தந்தானே இறையும்

115. தேவையெது ஊர்ஊர்க்கெனத் தேர்ந்தேதான் இருந்தார்
தன்னாலே இயன்றவரை தகுசேவை செய்தார்
சாவையுமே எண்ணாமல் சனங்களுக்காய் உழைத்தார்
சரித்திரத்து நாயகனாய்ச் சிறப்பதுவும் பெற்றார்

116. வீரமெனும் வார்த்தைக்கு விதப்புரையும் ஆனார்
வீண்தொல்லை என்றெதிலும் விலகியதும் கிடையா
பாரமென எச்செயலைப் பகர்ந்ததுவும் இல்லை
பாரினிலே அஷ்ர..பவர் பெருந்தலைவர் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117. சட்டமுடன் ஆட்சிமதம் சகலதுறை அறிவும்
சங்கமிக்கும் தளமாகச் சிறப்புற்றுத் திகழ்ந்தார்
பட்டமுடன் பதவிபணம் போன்றவைக்குப் பணியாப்
பண்பதனின் பாசறையில் பரிணமித்தே நின்றார்

118. தனித்துவமே குன்றாத தேசியத்தைக் காட்டி
தாய்நாட்டில் தன்னினத்தார் தலைநிமிரச் செய்தார்
இனியநெறி காட்டிட்ட இலட்சியத்துத் தலைவர்
இஸ்லாத்தின் இனத்தார்க்கு இந்நாட்டில் இவர்தான்

119. கிழக்கதுவும் கீர்த்திதனைக் கண்டிடவே அஷ்ர..்ப்
கடும்முயற்சி செய்திட்ட கர்த்தாவும் ஆனார்
வழமையென எமக்கான வம்பர்களின் தலைமை
வீழ்ந்திடவும் செய்திட்ட வீரனுமே ஆனார்

120. ஆட்சியதன் தலைமைக்கு அணியான பண்பு
அத்தனையும் அமைந்திட்ட அருந்தலைமை ஆனார்
மீட்சியது இனம்காண முயற்சியது செய்து
மக்களது மனங்களிலே மறையாது உள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121. அரசியலை அறியாமல் அடிமைநிலை கொண்டு
அவலத்தில் வாழ்ந்தோரின் அல்லலினைப் போக்கப்
புரட்சிமிகு அரசியலின் பாதையென ஆனார்
புத்தெழிலும் புதுவாழ்வும் புலர்ந்திடவும் செய்தார்

122. விடிவதனை இனம்காண வழியாகிப் போனார்
வசந்தத்தின் பெருக்கிற்கு விளைநிலமும் ஆனார்
முடியாது என்றவரும் மொழிந்ததுவும் கிடையா
முயற்சியதால் எல்லாமும் முடிந்திடுமே என்றார்

123. அஸ்ர.்.ப்என அறைகையிலே ஆனந்தம் ஓங்கும்
அவர்பணியைப் பார்க்கையிலே அதிசயமே தோன்றும்
முஸ்லிம்இனம் இந்நாட்டில் முகவரியே காண
முக்கியதோர் காரணமாய் முகிழ்ந்தாரே அவரும்

124. பதியுத்தீன் ம.்.மூத்எனும் பெருந்தகையும் அன்று
பகன்றிட்டார் தலைமைக்குப் பொருத்தம்அஷ் ரப்தான்
கதிநல்கும் அன்னவரும் காட்டுகிற அரசியல்
கொடுத்திடுவீர் ஆதரவு கூடுதலாய் என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125. ஆயுதத்தின் போராட்ட அரக்கர்களும் அன்று
அநீதிகள் முஸ்லிம்களுக் அளித்திட்ட வேளை
தாயின்நிலை போலவே தன்னினத்திற் காண
தகுபணிகள் செய்தேதான் தாய்நாட்டில் காத்தார்

126. தமிழர்தம் அரசியலின் தலைவர்கள் உடனே
தீராத வாஞ்சையுடன் தனித்துவமாய் நடந்தார்
தமிழ்ஈழம் அமிர்தலிங்கம் தந்திடா விட்டால்
தான்தருவேன் என்றேதான் தமிழர்க்குச் சொன்னார்

127. தமிழ்மொழியை முஸ்லிம்கள் தாய்மொழியாய்க் கொண்டு
தான்வாழ்ந்து வருவதனால் தமிழர்தம் பிரிவாய்
மொழியாதீர் அவர்களினை முஸ்லிம்கள் நாட்டில்
முற்றான தனிஇனமே முழங்கிட்டார் அஷ்ர.்.ப்

128. தந்தைச்செல்வா அரசியலின் தனித்திறமை இவரில்
தேங்கித்தான் திகழ்ந்ததையும் தெரிந்திடுவோம் நாமும்
இந்நாட்டில் அவரைப்போல் இணையற்ற தலைவர்
இன்னொருவர் இல்லையென இயம்பிடுவோம் நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129. மூலைகளால பேசுவதை முற்றாகத் தவிர்த்து
முயன்றெமது இதயத்தால் முனைப்பாகப் பேசின்
ஆலைப்போல் உயர்ந்திடுமே அமைதிநிலை நாட்டில்
ஆதலினால் இணைந்திடுவோம் அகத்தாலே என்றார்

130. ஓர்நூற்றாண் டரசியலின் உன்னதமாம் கொள்கை
ஊற்றாக ஓடிட்ட உயரியதோர் உளமாய்
பார்போற்றும் பெருமகனாய்ப் பேர்பெற்றே திகழ்ந்தார்
பாக்கியமே அவரெமக்குப் புரிந்திட்ட தலைமை

131. சந்திரிக்கா அஷ்ரஃப்பெனும் சரித்திரஒப் பந்தம்
செய்தேதான் முஸ்லிம்இனம் சிறப்படையச் செய்தார்
எந்தவொரு தலைவனுமே என்றென்றும் ஆற்றா
ஏராளச் சேவைகளை எமக்கென்றே செய்தார்

132. கறுப்புவெள்ளி என்கின்ற காத்திரமாம் தினத்தை
கருத்தாக நாடடினிலே காட்டித்தான் அன்று
சிறப்பாக முஸ்லிம்களைச் சிந்திக்கச் செய்தார்
சரித்திரத்தில் தன்செயலால் சாகாவரம் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

133. வடகிழக்கில் முஸ்லிம்கள் வளமாக வாழ
வழியதுவோ தென்கிழக்கு வலயமே என்றார்.
திடமதனில் கொண்டவரும் தீவிரமாய் உழைத்தார்
தீர்வினிலே அதைத்தானே தந்திடவும் கேட்டார்.

134. இனப்பகையை இந்நாட்டில் இல்லாமல் செய்ய
இனிதேத்தான் உழைத்திட்ட இலட்சியத்துத் தலைவர்
சனங்களுக்கு உதவுவதில் சந்தோசம் கண்டார்.
சரித்திரத்தில் இவர் நாமம் சாகாதே என்போம்.

135. அன்பினது ஊற்றாக அவனியிலே திகழ்ந்தார்.
அறிவினது இருப்பிடமாய் ஆகியுமே போனார்.
உன்னதமே இவர் வாழ்வு உலகினிலே என்று
உரைத்திடினும் எல்லோரும் உவந்தேற்பர் தானே.

136. புகழினது புகழாகப் பிறந்திட்ட அஷ்ர.ஃப்
புதியபல சிந்தனையின் பிறப்பிடமும் ஆனார்.
நிகரில்லா நற்பண்பின் நாயகனும் ஆகி
நம்அமர காவியமாய் நிலைத்திட்டார் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137. எம்இனத்தின் ஒளிச்சுடரே என்றான அஷ்ர.்.ப்
ஏற்றமிகு மாமணிபோல் எழில்தோற்றம் உடையார்
தம்உயிரை பலிகொடுத்துத் தனித்துவமும் காத்தார்.
தரணியிலே இவர்போன்ற தலைவர்கள் அரிது.

138. தலைமையினால் இனத்தினது தன்மானம் காத்தார்.
தலைநிமிர்ந்து நாட்டினிலே தன்னினமும் வாழ
நிலையான நெறியொன்றை நிலைநாட்டிச் சென்றார்.
நாட்டினிலே இவருக்கு நிகர்தலைமை இல்லை.

139. நல்லோர்கள் போற்றுகின்ற நற்குணத்தின் இவரோ
நாடதனை நல்முறையில் நேசித்தே நின்றார்.
பொல்லாத தலைமைக்கு பொல்லாரே ஆனார்.
புவியினது பிறப்பினிலே புதுமைதான் இவரும்.

140. உரிமைகளை வென்றெடுத்த உத்தமராம் இவரை
உன்னதத்தில் உயர்ந்தபெரும் உயர்மாந்தர் என்பேன்.
அரசியலின் அர்த்தம்என ஆகிட்ட அவரோ
அஞ்சாத நெஞ்சத்தின் அருவுருவாய் மிளிர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

141. வீரத்தைக் காத்திட்ட வித்தகராம் இவரோ
விடுதலைய்யை தந்திட்ட விடிவிளக்காய் திகழ்ந்தார்.
பாரதத்தின் ஜின்னாவாய்ப் புகழ்பெற்றும் கொண்டார்.
பிறப்பினிலே தலைவர்என பிறந்தும்தான் சிறந்தார்.

142. இன்பத்தமிழ் மொழிக்கவரும் இனிமைபல சேர்த்தார்.
இன்னலுற்ற இனத்திற்கு இன்பமென ஆனார்.
நண்பர்களின் நலன்களிலே நல்நாட்டம் கொண்டார்.
நன்றேதான் மாற்றினத்தை நாட்டினிலே மதித்தார்.

143. சத்தியத்தின் நெறிதனுக்குச் சான்றாகிப் போனார்.
சரித்திரத்து நாயகனாய் சரிதையிலே நிலைத்தார்.
எத்தகைய இன்னலையும் எழில் என்றே ஏற்றார்.
எம்இனத்தின் இதயமெல்லாம் ஏற்றமென நிறைந்தார்.

144. நாடாளும் மன்றத்தை நல்உரையால் கவர்ந்தார்.
நாட்டினிலே நல் அமைதி நிலவிடவே உழைத்தார்.
ஏடெல்லாம் அவர்புகழை எழுதிடவே உயர்ந்தார்.
ஏகன்இறை கொடையுமென எம்இனத்திற் கானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145. கொடுமைகளை கொன்றொழிக்கும் கொடுவாளும் ஆனார்.
கொள்கைதனை காப்பதிலே கருத்தாக இருந்தார்.
வடுவில்லா நிலையினிலே வையகத்தில் வாழ்ந்தார்.
வான்மழைபோல் எம்இனத்தின் வரமாக ஆனார்

146. துன்பங்கள் துயரங்கள் தொடராக வந்தும்
துவலாமல் தம்பணியைத் துடிப்பாகச் செய்தார்.
இன்முகத்துத் தலைவரினை இனத்தினது பேறாய்
இயம்பிடுவோம் என்றும்நாம் இந்நாட்டில் எங்கும்.

147. உயரியதாம் சிந்தனையின் உந்துதலால் அவரும்
உழைத்தேதான் இனத்திற்கு உயர்ச்சிதனைக் கொடுத்தார்.
பயனதனை இனமதுவும் பெற்றேதான் அவரால்
பல்துறையின் உயர்ச்சியெனப் பரிணமித்து உளதே.

148. எவ்விடய மானாலும் ஏற்றதொரு முடிவை
எடுப்பதிலே இவருக்கு ஏற்றநிகர் இல்லை.
அவ்முடிவு அத்தனையும் அதிசிறப்பே ஆகும்.
அதுதானே வெற்றிக்கு அடிப்படையாய் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. முரண்பாடு கொண்டோரை மனமொப்பி அழைத்து
முற்றாக தன்னுடனே முயன்றுபணி செய்ய
அரவணைத்த செயலதுவும் அற்புதமே என்போம்.
அதனாலே அவர்தலைமை அதிசயமே புரிவோம்.

150. தேசியஐக் கியமுன்னனி தாபித்தத னாலே
தாய்நாட்டில் அமைதிநிலை தழைத்தோங்க முயன்றார்..
வாசிக்காம் அரசியலை விட்டொழித்து நாட்டில்
வாழ்கின்ற மக்களது வளவாழ்விற் குழைத்தார்.

151. சட்டத்துறை தனிலேயும் சாதனைகள் படைத்தார்.
சிறப்புமிகு ஜனாதி பதிவக்கீல் ஆனார்.
எட்டியதாம் புகழதுவோ ஏராளம் தானே
எல்லாமும் அவர்க்குமோ ஏகனவன் கொடையே.

152. நாட்டினது இனப்பிரச்சனை நன்கேதான் தீர
நல்லதோர் தீர்வதுவை நாட்டமுடன் வரைந்தார்.
காட்டிட்ட அவர்தீர்வு கசடர்களின் சதியால்
காட்டினிலே ஏறிநிலவின் கதையாக ஆச்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153. அணிஆடை அனைத்தினிலும் அழகதனைக் காட்டி
அழகாக இருந்திடவே அனைவரையும் பணித்தார்.
இனிதான கருத்துரையால் இதயத்தைக் கவரும்
இதமான பண்புக்கு இருப்பிடமாய் இருந்தார்

154. அன்புக்கு அடிபணியும் அரும்பண்பு கொண்டார்.
அதிகாரம் செலுத்திடிலோ அடங்காது நின்றார்.
துன்பங்கள் தொடராக தாக்கிட்ட போதும்
துணிந்தெதிர்த்து வாழ்வினிலே தொடர்வெற்றி கண்டார்.

155. தொண்டர்களின் வாழ்விற்கு தனிப்பட்ட வகையில்
தரமான அறிவுரைகள் தெளிவாகச் செய்தார்.
வன்முறைகள் இல்லாத வளநாட்டைக் காணும்
வாஞ்சையுடன் அதற்காக வாழ்வெல்லாம் உழைத்தார்

156. சன்மார்க்க மேதையெனச் செப்புகிற வண்ணம்
சாந்திமறை இஸ்லாத்தில் சீர்ஞானம் பெற்றார்.
உன்னதமாம் தீன்மறையின் உயர்நெறியில் வாழ்வை
உயர்வாகப் பேணித்தான் உலகினிலே திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

157. ஓர்ஊர்க்கு அவர்வருகை ஓர்திருநாள் ஆகும்.
ஊர்அதுவும் அந்நாளில் உவப்பினிலே திகழும்.
நேர்கொண்ட பார்வையுடன் நிமிர்ந்திட்ட நடையும்
நாயகனாம் இவருக்கு நல்அணியாய் ஆகும்.

158. திருமறையின் சூராவாம் திருயாசீன் தன்னை
தன்இடுப்புப் பட்டியிலே தான்அணிந்து இருப்பார.
பெரும்பாலும் உலுவுடனே பொழுதெல்லாம் திகழ்வார்.
பெரியோனைத் தொழுதலிலும் பேனுதலே கொண்டார்.

159. தலைமையினால் தங்களையே தக்கஅணி செய்யும்
தலைவர்கள் மத்தியிலே தலைமைதனைத் தன்னால்
அலங்கரித்தார். இவர்என்றால் ஆனபெரும் உண்மை
அதிசயமே. இவர்தலைமை அறிவோமே நாமும்.

160. உயர்ச்சிதனின் உச்சத்தில் உலாவிய போதும்
உரியபடி தம்நட்பை உயர்வாக மதித்தார்
நியதிகளை மதித்தேதான் நிலத்தினிலே நடந்தார்.
நாட்டினது நடப்பெல்லாம்' நன்கேதான் அறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

161. கட்சிப்பணி என்றேதான் கனவேலை வந்தால்
கண்தூங்கா நிலையினிலே காலைவரை இருப்பார்.
திட்டமுடன் தன்பணியை திறம்படவே முடிப்பார்.
தரணியிலே இவர்போன்றோர் திடனாக அரிது.

162. மற்றோரின் கருத்துக்கு மதிப்பளிக்கும் தன்மை
மண்மீதில் இவருக்கு மாபெரிது என்போம்
கற்றோரை மதிக்கின்ற கண்ணியத்துக் குணமும்
கனமாக இவரிடத்தே காண்போமே நாமும்.

163. முடிவெடுக்கும் விடயத்தில் முனைப்பாக இவர்போல்
முடிவெடுக்க முடியாது மற்றவர்கள் யார்க்கும்
கடினமிகு விடயத்திலும் கலக்காது முடிவைக்
காத்திரமாய் எடுத்திட்டார். கண்டோமே நாமும்.

164. மக்களது தலைவன்என மண்ணுலகு செப்பும்
மாபெரிய உவமைக்கு முற்றாகப் பொருந்தும்
தக்கதாம் தலைவரிவர் தான்என்று நாமும்
தயங்காது உரைத்திடுவோம் தரணியிலே என்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

165. சிறுபான்மைக் கட்சிகளின் சிறப்பதனைச் காக்க
சிறிதாம் வெட் டுப்புள்ளியைச் சாதித்தார் ஜந்தின்
பெறுமான வீதமென பிரமதா சவுடன்
பேசித்தான் குறைத்திட்ட பெரும்செயலை புகழ்வோம்.

166. தன்னுடைய சட்டத்தின் திறமையினால் அன்று
தலைவிரித்த பிரமதா(சா) ஜனாதி பதிமேல்
கொண்டுவந்த குற்றப்பத் திரிகைதனை விலக்கி
காத்திட்டார். அவரையுமே கண்டிட்டோம் நாமும்.

167. வாக்குருதி காப்பதிலே வாஞ்சைமிகக் கொண்டார்.
வந்தபகை அத்தனையும் வீழ்தியே ஜெயித்ததார்.
தூக்குமே டையும்தனக்கு துச்சமே என்றார்.
தூய்மைவழி வாழ்ந்திட்ட துடிப்புமிகு தலைவர்.

168. துப்பாக்கிச் சதிதன்னால் துலங்கும்தன் மரணம்
தூரத்துப் பார்வையினால் துணிந்துரைத்தார் முன்பே.
தப்பாமல் அதுநடக்க தவித்தனரே மக்கள்
தரணியிலே இவரோஓர் தனித்தபெரும் அதிசயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

169. மரணத்தின் வீட்டினிலே மையயித்துப் போன்றும்
மாங்கல்ய விட்டினிலே மாப்பிள்ளை போன்றும்
சிறப்பாக நடந்தெங்கள் சிந்தையிலே நிறைந்தார்
சிறப்பினிலே இவருக்குச் சரிநிகரும் யாரோ?

170. தமிழர்தம் தனித்தபெரும் தலைவனனத் திகழ்ந்த
தந்தையராம் செல்வநா யகத்தினது சிறப்பை
தம்முளத்தில் நிறைத்தவரின் தனிப்புகழை என்றும்
தரணியிலே செப்பிவந்தார் தரமாகத் தானே.

171. என்இறக்கையில் கானுங்கள் எஸ்ஜேவியை என்னும்
எழிலான தலைப்பினிலே ஏற்றகவி யாத்து
உன்னதமே நிறைந்திட்ட உயர்தமிழர் தலைவரை
உள்ளத்தால் உரைத்தேதான் உயரின்பம் கண்டார்.

172. எங்கள்இன எழுச்சிக்கு ஏற்றதொரு தலைமை
எழிலாகத் தந்தேதான் ஏற்றமுற்ற அவரை
தங்கநிகர் தலைவனெனத் தானுரைத்து நிற்போம்
தலைமைக்குச் சான்றென்று திடமாகச் சொல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

173. தலைவரிவர் மறைந்ததனால் தலைமையுமே எமக்குத்
தொலைதூரம் தொலைந்ததுவே தவிக்கின்றோம் நாமும்
கலையிழந்த இனமென்றே காட்சிதரு கின்றோம்.
கொடியதுவே எம்நிலைமை குவலயத்தில் அறிவீர்.

174. பணத்தினது பக்கமாய்ப் பார்வையினைச் செலுத்தா
பண்புடனே பாரினிலே பாங்காகத் திகழ்ந்தார்.
குணத்தினிலே இவரையாம் குன்றேதான் என்போம்
கருணையிறை எமக்களித்த கொடையென்றும் உரைப்போம்.

175. அனைவர்க்கும் இப்போதில் அஷ்ரஃப்எனும் நாமம்
அரசியலின் முதலீடாய் ஆகித்தான் போச்சு
இணையற்ற அத்தலைவர் இலட்சியங்கள் ஏதும்
இல்லாத நிலைதானே இப்போதில் ஆச்சு.

176. பேரினத்து வாதிகளின் பிடியினிலே சிக்கி
பெரிதாக இனஉரிமை பறிகொடுத்த எமது
வீரியமே இல்லாத வக்கற்ற தலைமைகள்
வீழ்ந்தழியச் செய்திட்ட வீரமகன் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

177. கறிவேப்பிலை என்றன்று கணிப்பான எம்மோர்
கடும்சிறப்பு நாட்டினிலே கண்டிடவே செய்த
பெருந்தலைமை இவரென்று பகன்றிடுவோம் நாமும்
பொருந்திடுவர் மக்களெலாம் பேருண்மை இதனை.

178. சிங்கத்துத் தலைமையெனச் சிறப்பித்துச் சொல்லும்
சிறப்பிற்கு உரித்திவரே செப்பிடுவோம் என்றும்
அங்கத்தின் அவரசைவும் ஆயிரமாம் அர்த்தம்
அறைகின்ற அதிசயத்தை அறிவோமே யாமும்.

179. இந்நாட்டில் முஸ்லிம்கள் இன்னரும்எழுச் சியென
இயம்புகின்ற வேளையெல்லாம் இதமாக ஆங்கு
வந்தேதான் அஷ்ர.ஃபவர் வளமான நினைவு
வழங்கிட்ட அவர்தலைமையை விளக்கித்தான் நிற்கும்.

180. தன்னுயிரை உரமாகத் தந்தேதான் அவரும்
தந்திட்ட அரசியலின் தகுநெறியை நாமும்
பின்பற்றி நடத்தல்தான் பெருந்தலைவர் அவர்க்குப்
பெரிதும்யாம் காட்டுகின்ற பற்றுதல்கள் என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181. உரிமைக்கும் சலுகைக்கும் உரியதாம் அர்த்தம்
உரியபடி உரைத்திட்ட உத்தமத்துத் தலைவர்
சிறப்பதனைச் செப்புகையில் சிந்தையுமே மகிழும்
சரித்திரத்தில் அவர்புகழோ சாவின்றி வாழும்

182. ஆற்றல்களும் ஆளுமையும் அணிகலனாய் ஆக
அரசியலில் சாதித்த அவர்சேவை யாயும்
போற்றுதற்கு உரியனவே புரிந்திடுவோம் நாமும்
புவியென்றும் இவர்புகழை பேசிடுமே நன்கு.

183. அருமையுடன் பழகுகின்ற அருங்குணமும் கொண்டார்
அதிகாரம் கொண்டோரை அடக்கியே ஆழ்வார்
பெருமைகளை வெறுக்கின்ற பெருமகனும் இவரே
புவியினிலே இவருமோர் பேரதிசயம் தானே.

184. மற்றவர்கு உதவுவதில் மனநிறைவே கொண்டார்
மடைமைகளை மாய்ப்பதற்கு முயன்றேதான் நின்றார்
கற்றவர்க்கு கண்ணியமும் கொடுத்தேதான் வாழ்ந்தார்
கற்பனையில் இனஉயர்வை கண்டுமே களித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

185. பதியுத்தீன் மஹ்மூத்தெனும் பெருந்தகையை அவரும்
பெரிதுமே மதித்ததுடன் புகழ்ந்துரைத்தும் வந்தார்
சதிகாரக் கூட்டத்தின் சதியெல்லாம் ஜெயித்து
சரித்திரத்தில் தன்வாழ்வைச் சான்றென்றே தந்தார்.

186. சந்திக்க வருவோரின் சங்கதியை அறியும்
சிந்தைதான் அவருக்குச் சிறப்பென்று ஆச்சி
அந்தவிட யம்வந்தோர் அறைந்திடமுன் அறைவார்
அதிர்ச்சியிலே வந்தோர்கள் ஆழ்ந்திடுவர் தானே.

187. ஓர்ஊர்க்கு அவர்வந்தால் ஓடியே ஒழிப்பர்
ஒன்னலர்கள் எல்லோரும் உண்மையே அம்மா
பார்மீதில் இந்நிகழ்வு பரவசமே ஆகும்.
பேராற்றல் இவருக்குப் பெரியோன்கொடை தானே.

188. எழுத்தாளர் தொடர்பதனை ஏற்றமெனக் கொண்டார்
எழுத்தாளன் தானுமென எண்ணியே மகிழ்ந்தார்
பழுத்தநல் ஞானத்தின் பாசறையாய் மிளிர்ந்தார்
பழகுதற்கு நல்லபெரும் பண்பாளர் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

189. நாட்டினது நாற்புறமும் நன்கறிந்தே இருந்தார்
நல்லபெரும் அறிமுகத்தை நன்கேதான் பெற்றார்
வாட்டிட்ட வேதனையை வனப்பென்றே ஏற்றார்
வளம்பெறவே இனமதுவும் வரமென்றே ஆனார்.

190. முடியாது என்றவரும் மொழிந்ததுவும் இல்லை
முயலாது மூலையிலே முடங்கியதும் கிடையா
விடிவுண்டே முயன்றோர்க்கு விலம்பிட்டார் அவரும்
வாழ்வினிலே சான்றாகி வரலாறே படைத்தார்.

191. பொறுமைக்கு அவருமோர் பொக்கிசமே ஆனார்.
பெரும்கோப வேளையிலும் பொறுமையே காத்தார்.
சிறுமைத்தனச் செயலெதுவும் சிந்தையிலே கொள்ளா
சிறப்பான மனிதர்என சீவித்தார் உலகில்.

192. ஏழையர்மேல் இரக்கத்தை ஏராளம் சொரிந்தார்.
ஏற்றபல உதவிகளை எடுத்தவர்க்குச் செய்தார்.
தோழமையைப் பேணுவதில் தனிஇன்பம் கண்டார்.
தலைமைத்துவத் தன்மைகளின் தாற்பரியம் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193. உயர்ச்சியதன் உச்சத்தில் உலாவிய போதும்
உளமுவந்து பாங்கருடன் உறவாடி மகிழ்ந்தார்.
நியதிகளைப் பேணுவதில் நாட்டமே கொண்டார்.
நடத்தையிலே முன்மாதிரி நிலத்தினிலே இவரே.

194. உள்ளத்தில் உள்ளதையே உரைத்திடுவார் என்றும்
உள்ளொன்று வைத்தவரும் உரைக்காரே வேறு.
கள்ளமில்லா உள்ளத்தின் காட்சியுமவர் தானே.
காசினியில் இவர்மகிமை கூறுவதும் கடினம்.

195. மற்றோரின் கருத்துக்கு மதிப்பளித்தே வந்தார்.
மனதினிலே தூய்மைதனை மேலோங்கச் செய்தார்.
பற்றுதலே தாய்நாட்டில் பெரிதாகக் கொண்ட
பெருந்தலைவர் அஷ்ர.்.ப்பெனப் புகழ்ந்துரைப்போம் நாமும்.

196. கட்சிதனில் இருந்தோரில் கனத்தபெரும் பிரியம்
காட்டிட்டார். அஷ்ர.்.ப்பவர் கஸனலியில் தானே.
கட்டிட்ட கதையல்ல கனத்தபெரும் உண்மை
காங்கிரஸில் அவர்பங்கோ கனமாகும் புரிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

197. கொழும்பிருந்து விமானத்தில் கல்முனையை நோக்கிக்
கண்டிடவே மக்களினைக் கிளம்பிட்டார் அஷ்ரஃப்
வழமைக்கு மாறாக விமானமும் அன்று
விபத்தாகிப் போனதுவே விபரீதம் தானே!

198. இரண்டாயிரம் புரட்டாதி ஈரெட்டாம் தேதி
ஈழத்தின் முஸ்லிம்கள் இதயங்கள் யாவும்
இரத்தத்தைக் கண்ணீராய் இறைத்திடவே எங்கள்
இலட்சியத்துத் தலைவரவர் இப்பதியைத் துறந்தார்

199. விதியென்றே! விமானம் விபத்தான தாமோ
வம்பர்களின் கொடூர வஞ்சகத்துச் செயலோ!
சதியென்றோ நாமும்தான் சாற்றுவதோ! அறியோம்
சரித்திரத்து நாயகனின் சாவதனைத் தானே!

200. தலைவரிவர் மரணமது தற்செயலின் விளைவோ!
தீயோரின் திட்டமிகு தீச்செயலோ தானோ!
நிலைகுழைந்து நிற்கின்றோம் நிலத்தினிலே நாமும்
நிரப்பிடவும் முடியாதே நம்தலைவர் இடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

201. மரணமே எம்தலைவரை மண்ணுலகில் நீயும்
மறைந்தேதான் சென்றாலும் மனதெல்லாம் எம்மில்
சிறப்புடனே அவர்வாழும் சங்கதியை அறியாய்
சாகாமல் அவர்நாமம் சீவிக்கும் புரிவாய்

202. மரணமே நீதோற்றாய் மண்ணுலகில் இவரால்
மறைந்துமே மறையாமல் மக்கள்மனம் உள்ளார்
வரலாற்றில் இவர்நாமம் வாழ்ந்திடுமே என்றும்
வீழாதே மரணத்தால் விளங்கிடுவாய் நீயும்

203. உலகப்பெரும் தலைமைஎன உன்னதமே பெற்ற
உயர்ந்தோர்கள் பட்டியலில் உள்ளாவார் இவரும்
நிலத்தினிலே இவர்நாமம் நிலைத்தேதான் நிற்கும்
நாசத்தால் அவர்நாமம் நசிந்துமே போகா

204. தலைவரிவர் உடல்தன்னை தரையிருந்து மரணம்
தானெடுத்துச் சென்றாலும் தாவிவரும் அவரின்
நிலையான நினைவுகளோ நிலைத்திடுமே எம்மில்
நன்முறையில் அவர்நாமம் நானிலத்தே வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

205. இறந்தபினும் இறவாத இன்னரிய புகழின்
இருப்பிடமே என்றான இலட்சியத்துத் தலைவா
இறப்புக்கும் இயலாதுன் இன்னரிய புகழை
இல்லாமல் செய்திடவே! இயம்பிடுவோம் நாமும்

206. காவியத்தின் கருவாகக் காட்சிதரும் இவரைக்
காவியமாய் பாடுகையில் காவியமோ இங்கு
ஓவியமாய் தன்னையுமே ஒப்பனைகள் செயுதே!
உலகினிலே உன்னதத்தின் உயர்மாந்தர் இவரே!

207. காவியத்து நாயகனாய்க் கலைகட்டி நிற்கும்
கனதிறமைக் கருவிடமாம் கனத்தபுகழ் அஷ்ர.்.ப்
ஆவியது பிரிந்தாலும் அவர்நினைவோ எம்மில்
ஆண்டாண்டாய் நிலைத்திடுமே அழியாது என்றும்

208. எங்கள்இன ஏற்றமென ஏகனது கொடையாய்
ஏராள சேவைகளை எட்டநாம் வழியாய்
பொங்குபுகழ் பெற்றிட்ட பெருந்தகையே ஆனார்
புவிஎன்றும் மறவாமல் போற்றிடுமே இவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

209. இந்நாட்டு முஸ்லிம்களின் இனியபெரும் பேறாய்
இழந்திட்ட உரிமைகளை இனமடையும் வழியாய்
வந்துதித்த வீரத்தின் விளைநிலமே ஆன
வித்தகராம் அஷ்ர.்.பினை வாழ்த்தியே துதிப்போம்

210. இறையோனே இனநலனை இனிதேதான் காத்த
இலட்சியத்துத் தலைவரஷ்ர.்.ப் இவ்வுலகில் செய்த
கறையெல்லாம் பொறுத்தேயுன் கருணைதனைக் காட்டி
கொடுத்திடுவாய் அவருக்குக் களிப்புமிகு சொர்க்கம்

211. புவியினிலே அஷ்ர.்.பவர் புரிந்திட்ட குற்றம்
பொறுத்தேதான் இறையோனே பிரியமுடன் நீயும்
கவினொழுகு சொர்க்கத்தைக் கொடுத்திடுவாய் அவர்க்கு
கடும்வாஞ்சை கொண்டிதனைக் கேட்கின்றேன் ஏற்பாய்

212. இனமென்றே வாழ்ந்திட்ட இலட்சியத்துத் தலைவர்
இவ்வுலகில் செய்தபிழை இறையே! நீ பொறுத்து
உனதான சொர்க்கத்தின் உரித்தாளர் என்றே
உவப்புடனே அன்னவரை உன்னருளால் ஆக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

213. காங்கிரஸின் வளர்ச்சிக்குக் கலனலியும் செய்த
கனத்தபெரும் பணியெல்லாம் காலமெலாம் வாழி
ஓங்கியே அவர்புகழும் உலகினிலே வாழி
உன்னதமே பெற்றவரும் உயிர்நீண்டு வாழி

214. தலைநிமிர்ந்து முஸ்லிம்கள் தாய்நாட்டில் வாழ
தனித்தபெரும் தலைவரஷ்ர.'.ப் தந்தபெரும் கட்சி
நிலைபெற்று நாட்டினிலே நீடூழி வாழி!
நம்இனத்தின் உயர்ச்சிக்கு நற்பேறாய் வாழி

215. காங்கிரஸின் தலைமையதை கரத்தினிலே ஏந்திக்
காத்திரமாய் இன்றதனைக் காத்துவரு கின்ற
ஓங்குபுகழ் றவ்ப்ஹக்கீம் உயர்ந்தென்றும் வாழி
ஒப்பற்ற தலைவரென உன்னதமாய் வாழி

216 அஷ்ர.'.ப்அம ரகாவியம் ஆனஇந்நூ லதனை
அகமுவந்து படிப்போர்கள் அதிசிறப்பாய் வாழி
முஸ்லிம்கள் இந்நாட்டில் முன்னேற்றம் காண
முயற்சியது செய்திடுவோர் மகிமையுடன் வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

217. அருந்தலைவர் அஷ்ர..பவர் ஆற்றிட்ட பணியை
அறிந்தேதான் போற்றிடுவோர் அகமகிழ்வாய் வாழி
சிறப்புமிகு அவர்சேவை சிந்தையிலே கொண்டோர்
சிறந்தென்றும் செகத்தினிலே செழுமையுடன் வாழி

218. பெருந்தலைவர் அஷ்ர..பின் பெருமையினைப் பகர்வோர்
பேர்பெற்றுப் புவியினிலே பெருமகிழ்வாய் வாழி
அருந்தலைவர் அரசியலின் அர்த்தத்தைப் புரிந்தோர்
அவர்நெறியை அடியொற்றி அவனியிலே வாழி

219. இனத்தினது நலனுக்காய் இமயம்எனச் சேவை
இனிதேதான் செய்திட்ட இலட்சியத்தலை வரஷ்ர..ப்
கனத்தபுகழ் பெற்றேதான் காசினியில் வாழி
காலமெலாம் அவர்நாமம் கலைகட்டி வாழி

220 பெருந்தலைவர் அஷ்ர..ப்பெயர் புவியினிலே வாழி
புரிந்திட்ட அவர் சேவை புகழுடனே வாழி
வருங்கால சந்ததிக்கும் வழிகாட்டி என்றே
வையத்தில் அவர்நாமம் வாழியவே ! வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அரசியல் இலக்கணம்

✤ தன் தலைமையை
அதிசய மலர்களால் அலங்கரித்த
அருந்தலைவன் அஷ்ர.்.பே!

✤ உன் தனிப்பெரும் திறனை
வார்த்தைகளால் வரையத்
திராணியற்று என்பேணா தடுமாறுகிறது

✤ உன் தலைமைத்துவத் தாற்பரியங்கள்
இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தின்
அரசியல் அகராதியாய்
அர்த்தமாகிப் போன இன்றாம் பொழுதில்
உன்னை ஓர் காவியமாய் வடிவமைக்க
என் வார்த்தைகள் வாஞ்சை கொள்கிறது.

✤ சலுகை இச்சையில் திழைத்த
எம் துர்ச்சாதனத் தலைவர்கள்
இந்நாட்டு இஸ்லாமிய நங்கையின்
உரிமை உடையை உரித்தபோது......
நீயோ..... அவளுக்கு
விடுதலைப் போர்வையைப் போர்த்தி
அவளின் கௌரவத்தைக் காத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ தலைமைத்துவ இரகசியமும்
மனித மனங்களை வெல்லும் மந்திரமும்
வரமென்றே உனக்கு வாய்க்கப்பெற்றதனால்
என்றும் .... நீ
வெற்றி தேவதையால் ஆசிர்வதிக்கப்பட்டாய்

✤ உன் தலைமையின் ஜனனம்
இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தின்
அரசியல் அனாதை நிலைமையின்
மரணமாய் மாறிப்போனது

✤ இன்று எம் அரசியல் அரங்குகளில்
உன் தலைமைபற்றித்தான்
எல்லோரும்.....
உரக்க ஒலிக்கின்றார்கள்

✤ உன் பெயரை உரைப்பதன் மூலம்
தகுதியற்றோர் கூடத்
தலைமையைத் தம்வசப்படுத்திக் கொள்கின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ எம் சமூக அரசியல் சந்தையில்
உன் பெயருக்கோ.....கிராக்கி
மிக...மிக...அதிகம்

✤ எம் அரசியல் பிரகடனம் எல்லாம்.
அஷ்ரஃப் எனும் உன்பெயராகவே
இருந்து கொண்டிருக்கிறது.

✤ உன் தலைமை ஏட்டில்த்தான்
அரசியல் தலைமையின் அர்த்தத்தை
அதிகம் அறியக்கூடியதாய் இருக்கின்றது.

✤ வேதனை வேக்காட்டில்
வெந்து கொண்டிருந்த எங்களுக்கு
புதுச்சுகந்தத்தை வருசித்தது
உன் தலைமைத்துவத் தென்றல்தான்.

✤ எம் சமூக அறியாமைச் சாக்கடைகளை
அடித்துச் சென்று
புதுமணம் கமலச்செய்ததெல்லாம்
உன் பிரளயத்தலைமைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ வருங்கால சந்ததிக்கும்
ஒரு தலைவன் தலைவனாகிறான் என்பது
உன்னால்தான் இங்கு
உயிர்ப்படைந்து கொண்டிருக்கிறது.

✤ இன்று.....
எம் அரசியல் வளாகங்களின்
தலைமைத்துவச் சான்றுதல்களில்
உன் பெயர்தான்
பொறிக்கப்படுகின்றது.

✤ ஏழ்மைக்கடலில் மூழ்கி
எழுச்சிக்கரையை ஏகக்
கனாக் கண்டுகொண்டிருந்த எம்மினத்தைக்
கரை சேர்த்த ஓடமல்லவா நீ.

✤ எம்மினத்தின்
அடிமை இருளை அகற்றியதெல்லாம்
உன் அரசியல்ச் சுடர்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ உன் அரசியல் கரையில்த்தானே
எங்கள்
விடுதலை நாகரீகம் வளர்ச்சியுற்றது.

✤ உன் அரசியல்த் தவம்தானே
எங்கள் தனித்துவத்திற்கான
தார்மீக நெறியாகியது!

✤ உன் அரசியல் அகராதியை
ஏந்தியதன் காரணமாகத்தான்
ஏதோ! எம்மவர்கள்
இன்று.....
அரசியல் அரிச்சுவடியாவது
அறிந்தவர்களாய் இருக்கின்றனர்.

✤ எம் உரிமைச் சோலை
செழுமையுற
உன் தனித்துவச் சிந்தனைத் தூறல்தான்
துணை செய்து கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ உரிமைகள் இழந்து
உறங்கிக்கிடந்த எம் சமூகம்
உன் அரசியல் அதிர்வினால்த்தானே!
விழித்துக் கொண்டது,

✤ அரசியல் கரையில்
தனித்துவக் கொக்காய்
நீ இருந்த தவம்தானே!
இன்று.... நாம்
விடுதலை மீன்களை ருசிக்கக்
காரணமாய் இருந்து கொண்டிருக்கிறது

✤ ஈழத்திரு நாட்டின்
இஸ்லாமிய மங்கை
பூரிப்பும் புத்தெளிலும் அடைய
உன் அரசியல் அணிகலன்கள் தானே
அடிப்படையாய் ஆகியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ அரசியல் சந்தையில் வியாபாரிகளாய்
விலாசமிடப்பட்ட தலைமைகளால்
தாலாட்டப்பட்ட எம்மினம்
உன் இலட்சியத் தலைமையின்
வருகையின் பின்புதானே!
எழுச்சி என்பதைத்
தனதாக்கிக் கொண்டது

✤ நாட்டுச் சிகரத்தில்
ஆட்சி நதியின் போக்கை
நிர்ணயிக்கும் சக்தி நாமே என்பதை
உன் தலைமைத்துவ ஆற்றலால்
அர்த்த புஷ்டியாக்கினாய்.

✤ உன் அரசியல் சிந்தனைகள் தான்
எம் விடுதலைப் பயணத்தின்
பாதங்களாய்ப் பரிணமித்தன

✤ எங்கள்
விடுதலையின் விலாசமும்
இன்று அஷ்ரஃப் என்றுதானே!
அறையப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ தலைமைப் பதவிகளால்
தம்மை அலங்கரித்துக் கொள்ளும்
தலைவர்கள் நிறைந்த சமூகத்தில்
நீயோ......
தலைமையையே அலகரித்துநின்றாய்

✤ தம்பிழைப்புக்காய்
அரசியலைப் பிச்சைப்பாத்திரமாக்கிய
தலைவர்கள் மத்தியில்
நீயோ
எம் உரிமைப்பசிபோக்கிய
அரசியல் அட்சயபாத்திரமானாய்

✤ மக்கள் சேவையென
மண்ணில் ஊற்றெடுத்தோடிய
மாநதி....நீ

✤ நீ....சமூக சேவைகளின்
இலக்கணமாகவே
இங்காகிப் போனாய்
மக்கள் சேவகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ மாதலைவன் என்ற மணிமொழி
உன்னால்த்தானே!
உலகில் உயிர்ப்புற்றது

✤ வியாபார விருட்சத்தில்
வீற்றிருந்த எம்மவர்கள்
கல்விச் சோலையில் கால்பதிக்கத்
தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைப்
பரிணமிக்கச் செய்தாய்

✤ உன் சேவைப் பெருக்கால்த்தானே!
எம் சமூகக்களனி
செழுமையைச் செப்பிக்கொண்டிருக்கிறது

✤ எங்கள் அரசியல் களத்தில்
நீ.....வீரத்தளபதியாய்
வெற்றிவாகை சூடினாய்

✤ ஊர்கள் தோறும்
பல்மாடிக் கட்டிடங்களை
உன் புகழ்பாடும்
தடயங்களாய்த் தாபித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ நீ ஏந்திய
அரசியல்த் தூரிகைதான்
எம் இனத்தின் ஏற்றத்தை வரைந்தது.

✤ தேவை என
உனை நாடி வந்தோர்க்கெல்லாம்
உதவியின் ஊற்றானாய்

✤ வறுமைத் தடைதாண்டி
அபிவிருத்திச் சிகரத்தை
எம்மினம் அடைய
படிக்கற்களாய் அல்லவா!
நீ....பரிமாணம் பெற்றாய்

✤ அரசியல் கரையில்
உரிமைப் பிரளயமாய்ப்
பெருக்கெடுத்தோடிய....நீ
போலித் தலைமைத் தருக்களை
வீழ்த்தி ஜெயித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ சமூக நங்கையின்
காதல் பெருக்கால்.....
அவள் நலனிலே ஆவல் கொண்ட நீ
அவளின் ஏற்றத்திற்கு
உன்னையே ஏணியாக்கினாய்

✤ எம் சமூகப்பயிரின் செழுமைக்கு
உன்னையே
உரமாக்கினாய்

✤ பணத்திற்குப் பக்க வாத்தியம்
இசைக்கும் அரசியலில்
நீ....என்றும்
இன நலனுக்கே
இன்னிசை பாடினாய்

✤ அரசியல் வானில்
உன் அமைச்சுக் கதிரோனால்
தொழில் ஒளி வழங்கி
நாட்டுத் தடாகத்தில்
நம்மோர் வாழ்க்கைக் கமலத்தை
நன்கு மலரச் செய்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ அரசியல் வானில்
தன்மதியாய் நீ
உலாவந்தபோதுதான்
எம் சமூகத்தின் அறியாமைக் காரிருள்
அகன்று போனது

✤ உன் அரசியல் மேனியை
அலங்கரித்திருத்ததெல்லாம்
மாசுபடா மகத்துவப் போர்வைதானே!

✤ உன்னை எதிர்கொண்ட
விரோதிகளின் சதிகளையெல்லாம்
நேர்மைக் கவசத்தால் தடுத்து ஜெயித்தாய்

✤ நீ.....உயர்ச்சியின் உச்சத்தில்
பூத்துக் குலுங்கிய போதும்
ஏழ்மைக் கொழுகொம்மைத்தானே
பற்றிப் படர்ந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ உன் அரசியல் பயணப் பாதையில்
முட்களாய்த் தைத்த
பயங்கர வாதமும்
உன் உளஉறுதியின் முன்னே
பாதங்களாகவே அவைகள்
உனக்குப் பயன்பட்டுப்போயின.

✤ அரசியல் அரங்கில்
எத்தனையோ வஞ்சனை அதிர்வுகள்
தாக்கிய போதும்
என்றும் உன் உளத்தடாகம்
தளம்பாமலே இருந்தது.

✤ இன ஐக்கியப் பூக்கள்
வாயில் மலராமல்
உளப் பொய்கையிலே புஷ்ப்பிக்க
வேண்டும் என்ற....நீ அதற்கு
உதாரண புருசனாகவே திகழ்ந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ மனித மரணாலயமாய் மாறிவிட்ட
எம்நாடு
சமாதானச் சரணாலயமாய்
மாறவேண்டுமென்று
மனப்பூர்வமாய் யாசித்தாய்

✤ இருக்கும் போது
இனவாதி என்று
விரோதிகளால் விமர்சிக்கப்பட்ட நீ
மறைந்த பின்புதான்
மகாத்மாவாக....அவர்களாலேயே
அர்த்தம் கொடுக்கப்பட்டாய்

✤ பொருள் சேர்க்கும் அரசியல் அரங்கில்
நீ....மட்டும்
மானுடங்களையே சேகரித்தாய்

✤ உள்ளாசு விடுதிகளில்
நீ.....ஓய்வெடுக்காமல்
சமூகநலனுக்கு உழைத்ததனால்
எம்மவர்கள் இதயங்களை
என்றும் உன் இருப்பிடமாய் ஆக்கிக்கொண்டாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சாக்கடையாய் ஆகிப்போன
நம்மின அரசியலில்
நீயோ....ஆங்கே
சந்தனத் தருவாய்
தழைத்து மிளிர்ந்தாய

❖ இனப் புரிந்துணர்வை
உன்னில் இருந்தே
நாம் புரிந்து கொள்ளும் படி
புனிதமாய் வாழ்ந்தாய்

❖ நீயோ.....
அரசியல் ஞான சுரபியாய் இருந்தாய்
அதனால்
உன்னை அண்டியோர்கள் எல்லாம்
அரசியல் ஞானிகளாய் ஆகிப்போனார்கள்

❖ உன் உளத்தில்
எத்தனையோ ஆண்டுகளாய்
இன விடுதலை நாற்றங்கால்
இட்டிருந்த. நீ
முஸ்லிம் காங்கிரஸ் தோப்பின் மூலம்
அதனை அறுவடையும் செய்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ சமூகத்தின்
நாளைய வெற்றித் தென்றலுக்காக
நீ தாங்கிய வேக்காடுகள் தான்
உன் அரசியல் பயண ஏட்டின்
பக்கங்களாக இருந்தது..

✤ எம் சமூகக் களனியில்
உன் அரசியல் நதி
பாய்ந்ததனால்த்தானே
இன்று நாங்கள்
உரிமைப்பயிரின் நல்விளைச்சலை
அறுவடை செய்து கொண்டிருக்கிறோம்

✤ தூங்கி இருந்ததனால்
எம் உரிமைப் பொதிகளைத்
தலைமைத்துவத் திருடர்களிடம் பறிகொடுத்து
பரிதாபத்தின் அடையாளமாக இருந்த எங்களை
உன் சிந்தனை முரசால்த்தானே
தட்டி எழுப்பி எழுச்சிபெறச் செய்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ சலுகைத் தடாகத்தில்
மூழ்கிக்கிடந்த எம்மினம்
உரிமைச் சாகரத்தின் உயர்வை
உணர்ந்து கொண்டதெல்லாம்
உன்னால்த் தானே!

✤ எம் சமூகத்தின் தலைவிதியை
வரையும் தூரிகையாய்த் தானே
உன் இலட்சிய அரசியல் பரிணமித்தது

✤ உன் உரைமலரில் சிந்திய
வசிகர அமிர்தத்தால்
நாட்டின் நாற்புறமும்
மானிடத் தேனிக்களை
ஒன்றாய்க் கவர்ந்தீர்த்தாய்

✤ நீ உனக்காக வாழ்ந்ததை
உதறித் தள்ளியதால்
எல்லோர் இதயங்களிலும்
வாழும் வழிகண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❧ அன்று .....நாட்டில் எங்கெல்லாம்
எம் இனம் காயப்பட்டதோ!
அங்கெல்லாம் உன் அரசியல் நெறி
ஒத்தடமாய் ஆனது

❧ அறிவியல் மொழி ஆங்கிலத்தை
உனக்கே உரிய
மொழியாக்கிக் கொண்ட நீ
நான் எனும் நீ என்ற கவி மாலையைத்
தமிழ் நங்கைக்குச் சூட்டியதன் மூலம்
அவளையும் அழகுபடுத்தினாய்

❧ உன் இலட்சியப் பயணத்தில்
எதிர் கொண்ட இடர்கள் அனைத்தையும்
தளரா உறுதியால்
அவற்றை உன் உறுதுணையாகவே
உருமாறச் செய்தாய்

❧ குட்டிச் சுவரினத்தை
மாளிகையாக்கிய
மகத்தான தலைவன்
நீ.....என்பதை நிரூபித்துச் சென்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ எங்கள் உளத்தெருக்களுக்கு
ஒளியேற்றும் மின்சாரமாய்
உன் உரைதானே திகழ்ந்தது

❖ உன் தலைமைக் காலமே
எம் அரசியல் பொற்காலமாய்
இதிகாசத்தில் இடம் பிடித்துக் கொண்டது

❖ எம் சமூகத்தின் தலைவிதியை
உன் தூரப் பார்வையின் துலக்கத்தால்
நன்றே எமக்குணர்த்தினாய்

❖ ஆட்சி மன்றில்
அமைச்சர் எனும் கறுப்பாடை
நீ அணிந்ததெல்லாம்
எம் இனத்தின் வக்கீலாய் வாதாடத்தானே!

❖ நாட்டு நந்தவனத்தில்
இஸ்லாமியக் குயில்கூட்டம்
தனித்துவம் இழந்தும்
உரிமைச் சிறகுகள் சிதைக்கப்பட்டும்
வாழ்தல் கூடவே கூடாதென்று
தனித்துக் கூவியே
அவற்றின் வசந்தத்திற்கு வழிகாட்டினாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ அரசியல் சித்தாந்தத்தில்
உன் கருத்துரைககள்
மணி மொழிகளாய்த் தானே
மகுடம் சூடிக் கொண்டன.

✤ சுயநல அரசியலில்
நீ..... மட்டும்
பொது நலத்தின் பொக்கிசமாய் புலர்ந்தாய்

✤ இந்நாட்டில் முஸ்லிம் சமூகம்
வாழும் காலமெல்லாம்
அவர்களின் தலைமைத்துவ ஏட்டில்
அஷ்ர.்.ப் எனும் உன் நாமம்
முகவுரையாய் மிளிர்ந்துகொண்டே இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“தலைமைத் தனத்தின் தகுந்ததோர் சான்றாய்
நிலைகொண்டோன் அஷ்ரஃப்பை நோக்கு”

– குறள் –

“தன்னுயிரைத் தானமாய்த் தந்தேதான் நாட்டினிலே
நன்முறையில் தன்னினத்தை நேசித்த – உன்னதத்து
நாயகன் அஷ்ரஃபின் நற்தொண்டன் ஆன அனஸ்
நேயமுடன் யாத்தகவி நோக்கு”

– வெண்பா –

மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-41569-4-4

Printed by : A.R.T. Trinco 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org